In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

Original Suit No. 302/2006

Deposition of the C.W.1 witness for

Name : மத்தியாஸ்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 12.10.2022

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

வாதி தரப்பு விசாரணை

1. நான் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு ஸ்தலத்தை பார்வையிட்டு 2 வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். நீ.ம.சா.2 மற்றும் 3-ஐ என்னுடன் வந்திருந்த ஒய்வு பெற்ற நில அளவையர் வீரபத்திர ஆசாரி என்பவர் தான் மேற்படி 2 வரைபடத்தை தயார் செய்து கையொப்பம் போட்டு கொடுத்தார். நீ.ம.சா.2 ஆனது வாதி கொடுத்த வேண்டுகோளின் படி தயார் செய்யப்பட்டது. 10.08.1998 வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்திர படி வழக்கு பட்டிகை சொத்தை அளந்து திட்டப்படுத்தி நீ.ம.சா.2 வரைபடத்தை தயார் செய்யப்பட்டது. மேற்படி கிரைய ஆவணத்தின் இணைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் படி அளந்து திட்டப்படுத்தி வரைபடம் தயார் செய்யப்பட்டது. நீ.ம.சா.3 ஆனது 1969-ஆம் வருட அசல் வழக்கு எண்.417/1969-ல் உள்ள இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. நீ.ம.சா.2 ஆனது 417/1969-ல் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. நீ.ம.சா.2 ஆனது மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் அடிப்படையில் தான் தயார்

செய்யப்பட்டது என்றாலும் ஆனால் நான் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் அடிப்படையில் தயார் செய்யப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தானது மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள 17-வது கண்டம் தான் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது வழக்கு சொத்தில் 2 கல்லறைகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி 2 கல்லறையானது வாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்த நேசமணியின் மற்றும் அவரது மனைவி கல்லறை என்றால் சரிதான்.

2. வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் ரோடு உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் நடுபகுதியில் வாதியின் வீட்டிற்கு செல்லக்கூடிய மின்இணைப்பின் பெட்டி உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.2 மற்றும் நீ.ம.சா.3 -க்கு இடையே வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.2-ல் மேற்படி 2 கல்லறைகள் வழக்கு சொத்திற்குள் உள்ளதாகவும் ஆனால் நீ.ம.சா.3-ன் படி மேற்படி 2 கல்லறைகளும் வழக்கு சொத்திற்கு வெளியே உள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீ.ம.சா.2 மற்றும் 3 ஆனது ஒரே சொத்தான வழக்கு சொத்து குறித்து தான் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வேறுபாடு உள்ளதற்கு என்ன காரணம் என்றால் நீ.ம.சா.2 வாதியின் விலையாதாரத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. நீ.ம.சா.3 ஆனது 417/1969 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலைதீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டதால் மேற்படி வேறுபாட்டிற்கு காரணமாகும். நான் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது வழக்கு சொத்து மற்றும் அதனுடன் சேர்ந்த சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்படவில்லை. 417/1969 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலைதீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி அனைத்து கண்டங்களையும் அளந்து திட்டப்படுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் உள்ள 15 முதல் 17 வரையுள்ள கண்டங்களை மட்டும் தான் அளந்து திட்டப்படுத்தப்பட்டுள்ளது. நீ.ம.சா.3-ல் மேற்படி 15 மற்றும் 16 கண்டங்களை அடையாளப்படுத்தவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து மேற்படி 17-வது கண்டத்தில் 2 சென்ட் உள்ளதாகவும் தவிர மேற்படி 2 சென்ட் நிலத்திற்கு அதன் எல்கைகளை நீ.ம.சா.3-ல் குறிப்பிடவில்லை என்றால் மேற்படி 2 சென்டானது 17-வது கண்டத்திற்குள்ளே இருந்ததால் அதன் எல்லைகளை குறிப்பிடவில்லை. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள எல்லா கண்டங்களையும் அளந்து திட்டப்படுத்தாமல் நீ.ம.சா.3 தயார் செய்துள்ளதால் அது முறையாக தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் முறையாக நீ.ம.சா.2 மற்றும் 3-ஐ தயார் செய்யாததால் தான்

மேற்படி 2 வரைபடத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்று சொன்னால் பிரதிவாதிகள் தரப்பில் இறுதிநிலை தீர்ப்பாணையில் உள்ள வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள 15 முதல் 17 வரையான கண்டங்களை மட்டும் அளந்து திட்டப்படுத்த வேண்டுகோள் விடுத்ததின் அடிப்படையில் நீ.ம.சா.3 தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2 வரைபடத்தின் இடையே வேறுபாடு உள்ளதால் நீ.ம.சா.3 சட்டப்படி எற்றுக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ஆகையால் நீ.ம.சா.3 ரத்து செய்யப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணையில் உள்ள வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள அனைத்து கண்டங்களையும் அளந்து திட்டப்படுத்தி மேலும் மேற்படி வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள அளவுகளின் அடிப்படையில் அளந்து புதியதாக வரைபடம் தயார் செய்தால் தான் வழக்கு சொத்தை உண்மையிலேயே திட்டப்படுத்த முடியும் என்றால் சரியல்ல என் என்றால் வாதியும் பிரதிவாதிகளும் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் நீ.ம.சா.2 மற்றும் 3 தயார் செய்யப்பட்டுள்ளது.

<u>8-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஸ்தலத்தை பார்வையிடசென்றபோது வாதி மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படியாரின் முன்னிலையில் தான் அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி காட்டி தந்த வாதியின் கிரைய ஆவணமான 10.08.1998 -ல் உள்ள எல்கை படி தான் நீ.ம.சா.2 தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நீ.ம.சா.3 ஆனது இறுதிநிலை தீர்ப்பாணையில் உள்ள 15 முதல் 18 வரையான கண்டங்களை அளந்து திட்டப்படுத்தினேன் என்றால் சரிதான். அதன் பிறகு தான் 10.08.1998-ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள எல்கை படி நீ.ம.சா.3 தயார் செய்தேன். அதன் பிறகு 17-வது கண்டத்தில் தான 2 சென்ட் இடத்தை திட்டப்படுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி 2 சென்ட் இடமானது கிடப்பின் படி 2.160 லிங்ஸ் இடம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 10.08.1998 -ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் மற்றும் அசல் வழக்கு எண்.417/1969-ல் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் தான் நீ.ம.சா.3 தயார் செய்தேன் என்றால் சரிதான். நீ.ம.சா.2 தயார் செய்தபோது மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையை பார்த்து நீ.ம.சா.2 தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.